6. அரசின் சட்ட முன்வடிவு.

1986 ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

இந்தச் சட்டத் திருத்தத்தில் பேசுவதற்காக இரண்டு உறுப்பினர்கள் பெயர் கொடுத்துள்ளார்கள். சுருக்கமாக 5 நிமிடம் வீதம் எடுத்துக்கொண்டு பேசும்படி (நேரத்தைக் கருதி) கேட்டுக்கொண்டு, திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களை அழைக்கிறேன்.

திரு க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவின் மீது ஒருசில வார்த்தைகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தை இங்கே 1982 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதி முதற்கொண்டு இம்மாநிலத்தில் உள்ள பஞ்சாயத்து ஒன்றிய மன்றங்களில் உள்ள மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்த் தொகுதிகளில் உள்ள நல்வாழ்வு உதவியாளர்கள், துணைச் செவிலியர்,

@ 154 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பேறுகால உதவியாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள் ஆகியோர் அரசுப் பணியாளர்களாக வேண்டும் என்பதற்காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களாக அவர்களை மாற்றுவதை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை, தொடர்புடைய அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் முன்மொழிவார் என்று எதிர்பார்த்தேன். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்தாலும், அதுவும் எனக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன் ஊழியர்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் பிரிவுக்குக்கீழ்தான் வருகிறார்கள். ஆகவே இப்போதே அதற்கான கோரிக்கைகளையும் அவர்களிடம் சொல்வதற்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. காரணம், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை நாம் முன்பே 1—6—1981 லிருந்தே அரசு ஊழியர்களாக ஆக்கியபோதிலும், அவர்கள் இன்னும் பஞ்சாயத்து யூனியன் கட்டிடங்களில்தான் இருக்கிறார்கள். அவர்கள், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் என்றுதான் அழைக்கப்படுகிறார்கள்; அந்தப் பள்ளிக் கட்டிடங்கள் கூட ஊராட்சி ஒன்றிய மேல்நிலைப் பள்ளி என்றுதான் அழைக்கப்படுகிறது. அந்தக் குறைகள் இந்த ஊழியர்கள் விஷயத்தில் இல்லாமல், முழுமையான அரசு ஊழியர்களாக அவர்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் என்றுதான் இன்றைக்கும் அவர்களுக்குப் பெயர். அவர்கள் 1—6—1981 இல் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அவ்வாறு மாற்றப்பட்டதற்குப் பிறகு 'சர்வீஸ் ரூல்ஸ்' உருவாக்கப்படவில்லை. அதுபோல் இன்றைக்கு இவர்களும் அரசுப் பணியாளர்களாக மாற்றப்படுகிறார்கள். இவர்களுக்கு அரசு பணி விதிமுறைகளை ஏற்பாடு செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் இதுபோலத்தான் சொல்லப்பட்டது. ஆனால் ஐந்தாண்டுகள் ஆகியும் அவர்களுக்கு "சர்வீஸ் ரூல்ஸ்" இன்னும் உருவாக்கப்படவில்லை. அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் போராட்டங்களின்போது கூட, இன்னும் ஆறு மாத காலத்தில் உருவாக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இன்னும் கூட உருவாகவில்லை. இந்தக் கால தாமதம் இல்லாமல் அரசு ஊழியர்களாக இவர்களை மாற்றும்போதே, பணி விதிமுறைகளையும் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1986 ஏப்ரல் 30] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

அதோடு மட்டுமல்ல, அந்த மருந்தகங்களையும் அரசு மருந்தகங்களாக முழுவதுமாக மாற்ற வேண்டுமென்கிற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இம்மன்றத்திலே முன்பு பேசுகிறபோது, அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்கிற கோரிக்கையை வைக்கிற போதே, அரசு ஊழியர்களுக்குள்ள தொல்லைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டிவருமென்கிற அச்சத்தைப்பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர், "மாநகராட்சி, நகராட்சி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கினால், அவர்கள் மாநிலம் பூராவும் மாற்றப்படுவார்களா?" என்று கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், "அரசு ஊழியர்களாகவும் ஆக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்; மாநிலம் பூராவும் மாற்றல் செய்வதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கிறீர்களே" என்று சொன்னார்கள். நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1—6—1981 இல் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிய சமயத்தில் அவர்களை மாநிலம் பூராவும் மாற்ற வேண்டும் என்கிற சூழ்நிலை ஏற்பட்டபோது, அரசு ஒன்றை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்தையும் ஒரு 'யூனிட்' ஆக வைத்து, அந்த யூனிட்டுக்குள்தான் — அந்த ஒன்றியத்திற்குள்தான் — அவர்கள் மாற்றப்படுவார்கள் என்றும், அதற்கப்பால் மாற்றப்படமாட்டார்கள் என்றும் உறுதிமொழி கொடுத்து, அதற்காக ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதே ஆணையை இவர்களுக்கும் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், காரணம், இவர்கள் மிகவும் குறைந்த ஊதியம் பெறுகிறவர்களாவார்கள். அநேகமாக இவர்கள் சொந்த ஊரில் அல்லது சொந்த ஊருக்குப் பக்கத்திலே இருக்கிறவர்கள். அவர்களுக்கும் இதேபோல் 'யூனிட்' அடிப்படையைக் கொண்டுவந்து, யூனிட்டுக்கு அப்பால் மாற்றல் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நகராட்சி, மாநகராட்சி ஆசிரியர்களுக்கும் இதுபோல் 'யூனிட்' முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களாகி விட்டால் மாநிலம் பூராவும் செல்ல வேண்டுமென்று சொல்வது அவர்கள்பால் அன்பு இல்லாத வகையில் சொல்வதாகும்.

அடுத்து, இவர்கள் நல நிதி குறித்தும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றியபோது, அவர்கள் ஒன்றியமே அரசு ஊழியர்களாக மாற்றப்பட்டார்களே தவிர, நல நிதி

இன்னும் ஒன்றியத்திலேயேதான் இருக்கிறது. அரசுத் தரப்பிலே ஒப்படைக்கப்படவில்லை. இன்றைக்கும் ஊராட்சி ஒன்றிய ஆணையர்தான் கணக்கை வைத்துக்கொண்டிருக்கிறார். நல நிதி மாற்றம் கூட இதுவரை செய்யப்படாத சூழ்நிலை இருக்கிறது. அப்படி எல்லாம் இதிலும் ஆகாத வகையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்ட முன்வடிவிலே, "இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கும் அதன் கீழ் செய்யப் பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, பின்வரும் விஷயங்களைப் பொறுத்து, ஊராட்சி ஒன்றியத்தின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக தனக்குள்ள நிதிகளின் வரம்புக்குள் நியாயமான வகைமுறை செய்வதென்பது, ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் கடமையாக இருத்தல் வேண்டும்" என்று சொல்லி, இந்தக் கடமைகளிலே சிலவற்றை நீக்கப்பட்டிருக்கின்றன. பிரிவு 65-ன் கீழ் (எ)-க்கும் (பி)-க்கும் பின்னால், "இருந்து வரும் பிரிவு" என்கிற தலைப்பின் கீழ், "(சி)" தாய் (Thayi) பணியைப் பேணி வருவதும் குடும்பக் கட்டுப்பாடு பற்றித் தாய்மார்களுக்கு ஆலோசனையும் உதவியும் அளிப்பதும் உள்ளடங்கலாக, தாய்சேய் நல மையங்களை நிறுவிப் பேணி வருதல்" என்பது விடுபட்டு விட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஊராட்சி ஒன்றியத்திற்கு அந்தக் கடமை இல்லையா? இவை ஏன் விடுபட்டிருக்கின்றன? அரசு எடுத்துக்கொண்டதால் அங்குள்ள டிக்களுக்கு இந்த ஆலோசனைகள் தேவைப்படாதா என்பவைகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், "(எப்.) கொள்ளை நோய் அல்லது முறைக் காய்ச்சல் (மலேரியா) எதனின் தொடர்பாகவும் தடுப்பு மற்றும் குணப் படுத்தும் நடவடிக்கைகள்" விடுபட்டிருக்கிறது அதைப்போலவே குழந்தைகள் நல மையங்களைப் பராமரிப்பதும் விடுபட்டுவிட்டது என்று சொல்லப்பட்டிருக் கிறது. இப்படி விடுபட்ட பகுதிகள் நிறைய இருக்கின்றனவே, அம்மை குத்துவதற்குக்கூட உள்ளாட்சி மன்றத்திலே இருப்பவர்களுக்குப் பொறுப்பு கள் இல்லை என்பதைப்போல கூறப்பட்டிருக்கிறதே. அதன் உண்மையான நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

இப்போது ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மன்றங்களுக்கும் நின்றய கடமை களைக் குறைத்து தினம் ஒரு ஆணைமூலம் அரசு பிறப்பித்து வருகிறது. நேற்று ஒரு ஆணை, இன்று ஒரு ஆணை என்று பிறப்பித்து வருகிறது.

1986 ஏப்ரல் 30] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

(பிற்பகல் 1-45)

அதைப்போல சத்துணவுக் கூடங்களைப் பார்வையிடக் கூடாது என்று பெருந் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை அவமதிக்கும் வகையிலே காலா காலமாக அனுபவித்து வந்த உரிமைகள் பறிக்கப்படுவது நியாயம்தானா? அது நல்லதுதானா என்பதை அறிய விரும்புகிறேன், அதற்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வார்கள் என்று எண்ணி அமைகிறேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் நல்வாழ்வு உதவியாளர்கள், துணைச் செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள், பேறுகால உதவியாளர்கள் ஆகியவர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்குவதற்காக வந்துள்ள சட்டமுன்வடிவை நான் வரவேற்கிறேன், அதுகுறித்து சில கருத்துக்களைக் கூற வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவு, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் நல்வாழ்வுத் துறை பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்காக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1-6-1981-ல் பிறகு பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் எல்லம் அரசு ஊழியர்களாக ஆனதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அவைகளை நான் மீண்டும் கூற விரும்பவில்லை. இருந்தாலும் அதுபோன்ற சில நடைமுறைச் சிக்கல்களை எல்லாம் தவிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 1-6-1981-க்குப் பிறகு அரசு ஊழியர்களாக ஆசிரியர்களை நியமித்தாலும், பஞ்சாயத்து யூனியன்களில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அதை நாங்கள் அரசுக்கும் அவ்வப்போது எடுத்துக் கூறிவருகிறோம். அரசுக்கும் அதுபற்றித் தெரியும். அவைகளையெல்லாம் அரசு களைந்தெரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குள்ள சர்வீஸ் கண்டிஷன், ரூல்ஸ் சீனியாரிட்டி எல்லாவற்றையும் நல்ல முறையில் பாதுகாத்து அவர்களுக்கு வேண்டிய உரிமைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மாநகராட்சிகள் இவைகளிலுள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருக்கிறது. அவைகள் தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும்,

நகரத்திலும் இருக்கின்றன. இந்த நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பணியாளர்களை மட்டும் அரசு ஊழியர்களாக நியமித்ததைப்போல நகராட்சி, மாநகராட்சிகளில் பணியாற்றும் மருத்துவத் துறையிலுள்ள அனைத்துப் பணியாளர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு நடந்த மக்கள் நல்வாழ்வுக் கொள்கைக் குறிப்பின் மீது திரு லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போது, நகர சபை, மாநகராட்சி போன்றவற்றில் பணியாற்றும் மருத்துவத் துறை ஊழியர் களையும் அரசே மேற்கொண்டு அவர்களை நல்வாழ்வுத் துறையுடன் இணைத்து அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கூறினார்கள். அதையே தான் நானும் இந்த நேரத்தில் வலியுறுத்தி நகராட்சி, மாநகராட்சிகளிலுள்ள மருத்துவ மனைகளையும் அரசே எடுத்துக்கொண்டு அங்குள்ள ஊழியர் களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அமருகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாற்றுத் தலைவரவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதில் ஆட்சே பணை இல்லை. அவர்களுக்கு அரசு நேரடியாகச் சம்பளம் கொடுக்கிறது ஆனால் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு அவர்கள் மீது ஒரு கன்ட்ரோல் இல்லை என்று சொன்னால், அங்கு பணிகள் சரியாக நடக்காது என்பதுதான் என்னுடைய அனுபவம். இந்தப் பிரச்சினையை இரண்டு வகையாகப் பிரிக்க லாம். ஊழியர்களின் நலனைப் பார்த்தால், அங்கு ஊராட்சி ஒன்றியத் தலை வரின் கன்ட்ரோல் இல்லை என்றால், அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஆனால் அங்கு ஊரினுடைய நலத்தை உத்தேசித்துப் பார்க்கும்போது 'டுயல் கன்ட்ரோல்' (Department as well as Panchayat Union Chairman) இருந்தால் நன்றாக இருக்கும். ஆசிரியர்கள் பிரச்சினையைப்பற்றி அங்கு அனுபவ ரீதியாகச் சொல்கிறோம். ஆசிரியர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கன்ட்ரோலில் இருந்தால், அவருக்கு அவர்களுடைய பிரச்சினையைப்பற்றி நன்றாகத் தெரிந்திருக்கும். அவர்கள் வேலை செய்கிறார்களா, இல்லையா என்பதும் தெரியும். அப்படி இல்லை என்று சொன்னால், அங்கு பணி சரியாக நடக்காது. அதுபோல அதைப்பற்றியும் அமைச்சர் அவர்கள் சிந்தித்து அதற்குப் பரிகாரம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாற்றுத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசினாலும், நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திருத்த மசோதா எப்படி வந்தது, அது வந்த முறை, வந்ததற்கான காரணம் என்ன என்பதைப் பற்றிச் சொல்வது மன்ற உறுப்பினர்களுக்குப் பயன் உள்ளதாக இருக்கு மென்று கருதுகிறேன். 29—9—1982 அன்று நல்வாழ்வுத் துறை இலாக்காவின் சார்பாக ஜி.ஓ. 1936 பிறப்பிக்கப்பட்டது. அந்த ஆணையின்படி Panchayat Union Maternity Assistants, Auxiliary Nurse Midwives, and Health Assistants must be converted to Government side under the multi purpose Health workers scheme என்ற திட்டம் ஏற்படுத்தப் பட்டது.

(பிற்பகல் 1-50)

பல்நோக்கு மக்கள் நல்வாழ்வுப் பணியாளர்த் திட்டம் என்ற ஒரு நல்ல திட்டம் அகில இந்திய ரீதியாக நேஷனல் ஹெல்த் பாலிசியின் அடிப்படையில் எல்லா மாநிலங்களிலும் ஏற்படுத்தப்பட்டது. 'மல்டி-பர்பஸ் ஹெல்த் ஒர்க்கர்ஸ் ஸ்கீம்' என்ற புதிய திட்டத்திற்கு அஸ்திவாரம் போடப்பட்டது உலக சுகாதார நிறுவனத்தில் வளரும் நாடுகள் இந்தப் புதிய திட்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டதை நம்முடைய இந்திய தேசமும் ஏற்றுக்கொண்டது. இந்தப் பல்நோக்கு மக்கள் நல்வாழ்வு பணியாளர்களின் பணி என்னவென்றால் தாய்-சேய் நலவிடுதி என்று சொல்லப்படும் ஹெல்த் சப்-சென்டர்களில் பணி செய்வதுதான். இந்தக் கிளை சுகாதார நிலையங்களில் டாக்டர்கள் கிடை யாது. ஒவ்வொரு சுகாதார நிலையத்திற்கும் ஏறத்தாழ பத்து கிளை நிலை யங்கள் இருக்கின்றன. If we activise the sub-centres, they will take care of three-fourth of health problems. இந்த கிளை நிலையங்களை நல்ல வகையில் செயல்படுத்தினால், முக்கால் பாக வியாதிகளை எதிர்த்துப் போராடுவதிலே நாம் வெற்றி பெற முடியும். ஒருவருக்கு மெட்டர் னிட்டி அசிஸ்டெண்ட் பயிற்சி கொடுத்தால், அவருக்குத் தடுப்பு ஊசி போடு வதைப் பற்றி விவரங்கள் தெரியாது. ஆகவே ஐந்தாயிரம் ஜனத்தொகை உள்ள பகுதியில், அதாவது 800 குடும்பங்கள் உள்ள பகுதியில் எத்தனை நோயாளிகள் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தனை பேர்கள் காச நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது எல்லாம் அவர்களுக்குத் தெரியும். ஏனென்றால் அதற்கென்று ஒரு கார்ட் வைத்திருக்கிறோம், ஒவ்வொரு சப்-சென்டரிலும் ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றிய ஹெல்த் ஸ்டேடஸ் பற்றிய விவரங்களை அங்கு வைத்துள்ளோம். ஒரு குடும்பத்தை எடுத்துக்கொண்டால், அதிலே எத்தனை பேர் கருத்தடை ஆப்பரேஷன் செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்கள் குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இருக்கிறார்கள், எத்தனை பேர்

தொழு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பேருக்கு டீ.பி. நோய் இருக்கிறது என்ற விவரங்களை எல்லாம் நான்கைந்து பக்கங்கள் கொண்ட அந்தச் சிறிய புத்தகத்திலேயிருந்து தெரிந்துகொள்ளலாம். அதை நல்ல வகையிலே வைத்துக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் சுகாதார நிலையங்களுக்கு வரும்போது பார்த்திருப்பார்கள். இதையெல்லாம் எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்று பல நோக்குப் பயிற்சியை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்தப் பயிற்சியை டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர்ஸ் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே பஞ்சாயத்து மூலமாக நடைபெறுகிற கிளை சுகாதார நிலையங்கள் 2,814. அவைகளை தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக பல்வேறு வகைகளில் பஞ்சாயத்துக்களின் மூலமாக நடத்திக் கொண்டு வருகிறோம். அது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக கிளை நிலையங்கள் 7,650-ஐ ஏற்படுத்தியிருக்கிறோம். எட்டாயிரம் நம்முடைய குறிக்கோள். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் எட்டாயிரம் ஏற்படுத்தி விட்டால், அகில இந்தியாவில் நாம் இலக்கை எட்டிய மாதிரி ஆகும். இதிலே இரண்டு மாநிலங்கள்தான் முதலிடத்திலே இருக்கின்றன. மகாராஷ்டிரா மாநிலம் முதலிடத்திலே இருக்கிறதோ என்னவோ தெரியாது. நாம் முன்னணியில் இருக்கிறோம். பஞ்சாயத்து மூலமாக நடைபெறுகிற 2,814 கிளை சுகாதார நிலையங்களில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர்களாக மாற வேண்டும் என்று நாம் ஆணையிட்டோம். உடனடியாக அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதற்கு மாறாக, அவர்கள் இதை வேண்டும் என்று விரும்பவில்லை. பல நோக்கு சுகாதாரப் பணியாளர் திட்டம் தேவையில்லை என்பது அவர்களுடைய எண்ணம். அவர்களுக்கு யார் சொன்னார்களோ தெரியாது. இது ஒன்றும் அவ்வளவு வேலைப் பளு அளிக்கக் கூடியதும் அல்ல. கோர்ட்டுக்குச் சென்று இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகின்றன. உலக வங்கியில் இருப்பவர்கள்கூட, இதற்காக ஏன் கோர்ட்டுக்குப் போகிறார்கள், இது சின்ன பிரச்சினைதானே என்று என்னைக் கேட்கிறார்கள். பலமுறை கோர்ட்டுக்குச் சென்ற பிறகு, இதற்காக சட்டத்தைத் திருத்தலாம் என்று ஒரு யோசனை சொன்னார்கள். ஆகவேதான் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். அவர்களுக்கு இந்தப் பயிற்சி கொடுத்து, அவர்களை அரசு ஊழியர்களாக மாற்றி, நாம் முழுமையாக 7,650 கிளை நிலையங்களிலும் ஒரே மாதிரியான ஹெல்த் கேர் சிஸ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறோம்.

இன்னுமொரு வகையிலே ஒரு புள்ளி விவரத்தைச் சேகரித்தோம். எந்தெந்த இடத்திலே 'டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர்ஸ்' பயிற்சி கொடுக்கிறார்களோ அந்த இடங்களில் எல்லாம் மிகச் செம்மையாக பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் சரியாக எங்கு பயிற்சி பெறவில்லையோ அங்கெல்லாம் இந்த டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர்ஸ் அவர்களின் கண்காணிப்புத் தேவை என்று சொன்

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 1-55)

னோம். கண்காணிப்பு நிச்சயமாக இருக்கும். ஏனென்றால் இந்த டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசருக்கு ஏறத்தாழ இப்போது 29 டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் யூனிட்ஸ் நம் தமிழகத்திலே இருக்கின்றன. அந்தக் காரணத்தினாலே ஒரு டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் யூனிட்டுக்கு ஏறத்தாழ 10, 12 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கும். அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 300, 250 கிளை நிலையங்கள் இருக்கும். அந்த அளவிலே கண்ட்ரோல் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயம். விடப்பட்ட பகுதிகள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். விடப்பட்ட பகுதிகள் என்றால் என்ன என்று சொல்கிறேன். நாம் நல்ல வகையிலே செய்ய வேண்டும் என்பதற்காக டிரெயினிங் கொடுத்ததற்குப் பிறகுதான் அனுப்புகிறோம். டிரிப்பிள் ஆண்டிஜென் இன்ஜெக்ஷன் என்றாலும் சரி, வேறு இன்ஜெக்ஷன் என்றாலும் சரி, நாம் டிரெயினிங் கொடுத்த பிறகுதான் அனுப்புகிறோம். அப்போதுதான் அது நல்லதாக இருக்கும். அதே நேரத்திலே பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் உதவியும் அங்கே தேவைப்படுகிறது. அவர்கள் அங்கே ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியது அவசியம். அந்த டிரெயினிங் கொடுப்பது என்பதை டி.எச்.ஓ.-விடம் கொடுத்த காரணத்தினாலே அந்தப் பஞ்சாயத்துப் பகுதியில் இல்லை என்பதில்லை. அது சுகாதார எல்லைக்குள் வந்துவிடுகிறது. ஆகவே எந்தப் பகுதியும் விடப்படவில்லை. அதிலே நமக்கு 'ரெஸ்பான்சிபிலிட்டி' இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக அங்கேயெல்லாம் பணி நடைபெறுகின்றது. அங்கே பஞ்சாயத்து தலைவர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். அந்தப் பணிகள் அங்கே நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையின் மூலமாக இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள், உதவி இல்லாமல் நம்மால் சரியான முறையில் ஒன்றும் செய்ய முடியாது. அது கல்வித் துறையாக இருந்தாலும் சரி,

சுகாதாரத் துறையாக இருந்தாலும் சரி, அந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் உதவி இருந்தால்தான் நாம் சரியாகச் செய்ய முடியும்.

"They should be taken into confidence" மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள்கூட கவலைப்படத் தேவையில்லை. நமக்கும் 'வெஸ்டட் இன்டரஸ்ட்' இருக்கின்றது. அவர்களையும் நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். நாம் இந்தப் பணியைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இதிலே ஒரு தவறான எண்ணத்தைக்கூட கொண்டிருக்கின்றார்கள். நாம் அதை பஞ்சாயத்திலே யிருந்து பிரிக்கப்போகிறோம், அங்கே அவர்களுக்கு இருக்கக்கூடிய உரிமை யைப் பறிக்கப்போகிறோம் என்று நினைக்கின்றார்கள் என்றால், அது அப்படி இல்லை.

1982 ஆம் ஆண்டு on the basis of the national Health Policy. என்ற அளவில் மத்திய அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, 'மல்டி பர்பஸ் ஹெல்த் சர்வீஸ்', இருப்பதாகக் கருதி எல்லா இடத்திலேயும் 'யூனிபார்ம்' ஆக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே செய்யப்பட்டிருக்கின்றது. தாமதம் ஆகியதற்குக் காரணம் கோர்ட்டிலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு விவகாரம். அதன் காரணமாக இப்போது நமக்கு ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த வகையிலேதான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு இதை நிறைவேற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டன.

பிரிவு 1, சட்டமியற்றும் முறை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1986 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 3—5—1986, சனிக் கிழமை, காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-59)

7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

211. 1984-85 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் பதினான்காவது ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) (1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (ஏ) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

179. சமூக நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

180. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

181. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

182. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

183. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).